முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 240/2016

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜு | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : இலுவம்பாளையம் |
| வயது | : 64 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 08-01-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் தடம் என்று குறிப்பிடும் அதாவது பிரதிவாதிகள் தங்கள் இடம் என்று சொல்லும் இடத்தில் குழி எதுவும் இல்லை மண் போட்டு சமன் செய்துள்ளார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற 10 செண்ட் வழியாகத் தான் நான் 68 செண்ட் இடத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் தடமாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதாக சொல்வது தவறானது என்றால் சரியல்ல. நான் 68 செண்ட்டை பயன்படுத்தி வருவதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என தாவா தாக்கல் செய்துள்ளேன் அதனால் தட பாத்திய உரிமை கோர முடியாது என்றால்சரியல்ல. நான் உண்மையை மறைத்து செக்குபந்தியில் தடமாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அந்த இடம் பிரதிவாதிகளுடையது என்றாலும் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.01.08 15:53:39 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.